தெரிந்தெடுப்பதற்கு ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், அதற்கு மத்திய அரசு தேவையான அளவு உதவி செய்ய வேண்டுமென்ற கருத்து மத்திய அரசிடம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

*Separate wing for Architecture*

*484 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open an independent Architectural Wing in this State as recommended by the State Administrative Reforms Commission; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆட்சி சீர்திருத்தக் கழகம் செய்த சிபாரிசுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. என். டென்னிஸ்:** எப்போது அவைகள் நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பரிசீலனையில் இருக்கிறது. முடிந்த உடன் நடைமுறைக்கு வரும்.

அண்ணுசாலையில் சுரங்கப்பாதை

*485. **வினு—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, அண்ணுசாலையில் மின் வாரியத் தலைமை அலுவலகத்திற்கு அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆம்.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் ஆம் என்ருர்கள். அப்படியானல் அந்த வேலை எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? எப்போது முடிவுறும்? அதற்காகும் செலவு என்ன?